**செய்தி வெளியீடு எண்: 1014** **நாள்: 24.12.2009**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>21–வது சாலை பாதுகாப்பு வார விழா கடைப்பிடித்தல்</u>
## <u>2010, ஜனவரி 1 முதல் 7 வரை</u>

சாலைப் பாதுப்பு குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் சாலை பாதுகாப்பு வார விழா தேசிய அளவில் ஜனவரி முதல் வாரத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. தற்போது கடந்த ஆண்டுகளைப் போல மத்திய அரசு அறிவித்துள்ளபடி 21–வது சாலை பாதுகாப்பு வாரம் 2010 ஜனவரி 1 முதல் 7 வரை கடைப்பிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சாலை பாதுகாப்பு வார விழாவின் மையக்கரு.

**"பாதுகாப்பான வாகன ஓட்டமே "**
**" வாழக்கையின் பாதுகாப்பு"**

2. ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்பு சுமார் ஒரு இலட்சம் என்பது மிகவும் கவலை அளிக்க கூடியதாக உள்ளது.

3. தமிழகத்தில் 01–10–2009 நிலவரப்படி தமிழகத்தில் 8,15,638 போக்குவரத்து வாகனங்களும் 1,08,53,084 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் ஆக மொத்தம் 1,16,68,722 வாகனங்கள் இயங்கி வருகின்றன. மொத்தம் உள்ள வாகனங்களில் சுமார் 95,60,749 லட்சம் வாகனங்கள் இரு சக்கர வாகனங்களாகும் என்பதுகுறிப்பிடத்தக்கது,

4. அபரிதமான வாகன பெருக்கத்தினாலும், சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறைவினாலும், சாலை விதிகளை முறையாக கடைப்பிடிக்காததாலும் 2009 ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் திங்கள் வரை உயிர் இழப்பு ஏற்படுத்திய 10742 சாலை விபத்துக்களில் 11592 உயிர்களை தமிழகம் இழந்துள்ளது, இதில் சென்னை பெருநகரில் மட்டும் உயிர் இழப்பு ஏற்படுத்திய 500 சாலை விபத்துக்களில் 510 நபர்கள் உயிரிழந்துள்ளனர். சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சாலை விபத்துக்களை தவிர்க்கவும் அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

(அ) சாலை பாதுகாப்பு கொள்கையினை 2007ம் ஆண்டு தமிழக அரசு வெளியிட்டுள்ளது. மத்திய அரசு, தமிழக அரசின் சாலை பாதுகாப்பு கொள்கை குறித்த முயற்சியினை கருத்தில் கொண்டு இதே போன்ற கொள்கையினை பிற மாநிலங்களும் தமிழ்நாடு அரசினை முன்னோடியாக கொண்டு அமுலாக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளது. இதே போன்று, தமிழக அரசின் சாலை பாதுகாப்பு கொள்கையினை முன் மாதிரியாக கொண்டு மத்திய அரசு தேசிய சாலை பாதுகாப்பு கொள்கையினை அறிவிக்க உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஆ) குடிபோதையில் வாகனங்களை ஓட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2009ம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் மாநிலம் முழுவதும் குடிபோதையில் வாகனம் ஓட்டியதற்காக 5947 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களின் ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ ரத்து செய்யப்பட்டுள்ளது. இதேபோல் சாலை விபத்துக்களுக்குள்ளான வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்களில் 4816 ஓட்டுநர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இவை இன்றி, இது போன்று விபத்துக்குள்ளாகும் கனரக வாகனங்களின் அனுமதி சீட்டும் தற்காலிகமாகவோ (அ) நிரந்தரமாகவோ ரத்து செய்யப்பட்டு வருகின்றது. 2009ம் ஆண்டில் ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை மாநிலம் முழுவதும் இதுபோன்று 1064 வாகனங்களின் அனுமதி சீட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஓட்டுநர்கள் மீதும் வாகன அனுமதி சீட்டு மீதும் கடுமையான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படுவதால் சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

(இ) விபத்துக்களில் காயம் அடையும் நபர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்க மாநிலத்தில் **100** அவசர சிகிச்சை மையங்கள் துவக்கப்பட்டு நல்லவிதமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. **2009** ஆம் ஆண்டில், ஜனவரி முதல் அக்டோபர் வரை இம்மையங்கள் மூலமாக விபத்துக்குள்ளான **9085** நபர்களின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

(ஈ) சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையாளர் ஆகியோருக்கு நடப்பாண்டு **2009–2010**ல் சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து ரூ.**112** இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலைப் பாதுகாப்பு நிதியின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள வேலைகளான போக்குவரத்து தானியங்கி விளக்குகள், போக்குவரத்து நிழற்குடைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கு ஏற்படும் செலவினமாக ரூ.125 லட்சம் மற்றும் ரூ.70 லட்சத்தை சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து சென்னை காவல் துறை ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் சென்னை புறநகர் காவல் துறை ஆணையருக்கு ரூ.125 லட்சம் சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது. காவல்துறை, சுகாதாரத்துறை, செய்தி விளம்பரத்துறை, கல்வித்துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாலை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், சாலை விதிகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்ச்சி உருவாக்கும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி முதல் வாரத்தில் நாடு முழுவதும் “ சாலை பாதுகாப்பு வார விழா ” சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக, மாவட்ட நிர்வாகம், காவல்துறை, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் மற்றும் பொதுப்பணித்துறை/நெடுஞ்சாலைத்துறை மூலமாகவும் தனியார்

தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 5) உயிரிழப்பு ஏற்படுத்தும் விபத்துக்கள் ஆய்வு செய்தல்

விபத்து நடந்த இடங்களை ஆராய்ந்து உயிரிழப்பு ஏற்படுத்தும் விபத்துகள் நடைபெறா வண்ணம் தடுக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளஅரசு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழு, விபத்து நடைபெறும் இடங்களை பல்வேறு கோணங்களில் கூர்ந்து ஆய்வு செய்து அதன் மூலம் விபத்துக்களின் காரண காரியங்களை தீர ஆராய்ந்து அதற்கான காரணத்தை கண்டறிந்து மிகச்சரியான பரிந்துரைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி மேற்கண்ட ஆய்வுகள் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உரிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6) சாலைசந்திப்புகளில் விபத்து நடைபெறாவண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

அரசு, 1283 கிராமப்புற / நகராட்சி சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணையும் சந்திப்புகளை கண்டறிந்து அவற்றிற்கு வேகத்தடை, எச்சரிக்கை பலகைகள் மற்றும் மின் விளக்கு வசதிகள் அமைக்க ரூ. 12.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கூறிய பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது.

## 7) 21–வது சாலை பாதுகாப்பு வார விழாவில் பின்வரும் செயல்கள் கடைப்பிடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பற்றிய நிகழ்ச்சிகள்</u>**

1) மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புச் செய்தி
2) சம்பந்தப்பட்ட துறைகளின் மூத்த அதிகாரிகள் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு சாலைப் பாதுகாப்பு குறித்த கூட்டங்கள் நடத்துதல்
3) அகில இந்திய வானொலி மற்றும் தொலைக் காட்சிகளில் சாலைப் பாதுகாப்பு பற்றிய கலந்துறையாடல்கள்
4) சாலைப் பாதுகாப்பு சம்பந்தமான சிறந்த வாசகங்களைத் தேர்வு செய்து அதில் தலை சிறந்த வாசகங்களுக்கு பரிசளித்தல்

5) முக்கிய நபர்களின் சாலைப் பாதுகாப்பு செய்திகளைத் தினசரி செய்திதாள்களில் வெளியிடுதல் மற்றும் விளம்பரங்கள் வெளியிடுதல்

6) முக்கியமான சாலை சந்திப்புகளில் விளம்பர ஊர்திகள் மூலமாக சாலைப் பாதுகாப்பு பற்றி பொது அறிவிப்பு செய்தல்

7) முக்கியமான இடங்கள் மற்றும் போக்குவரத்து சந்திப்புகளில் சாலைப் பாதுகாபப்பு குறித்து விளம்பர தட்டிகள் மூலமாக சாலை விதிகள், சாலை சமிக்சைகள், சாலைகளில் செய்ய கூடியவை செய்ய கூடாதவை பற்றி அறிவித்தல்

8) பொது இடங்களில் சாலைப் பாதுகாப்பு பற்றிய பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள,. நடத்துதல் குறும்படங்கள் திரையிடுதல் போன்றவைகள் செய்யலாம்

9) சாலை உபயோகிப்பவர்கள் மற்றும் ஒட்டுநர்களுக்கு சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள், சிறுவர், சிறுமியர்களுக்கு கையேடுகள் வழங்குதல்.

10) ஒட்டுநர்களுக்கு இலவச மருத்துவ சோதனை மற்றும் கண் பரி சோதனை முகாம்கள் நடத்தி இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்குதல்

11) அதிவேகம், அதிக சுமை ஏற்றுதல், அனுமதியில்லா இடங்களில் வாகனங்களை நிறுத்துதல் மற்றும் குடிபோதையில் வாகன ஒட்டுதல் ஆகியவைகளைச் சோதனையிடுதல்.

12) பள்ளி மற்றும் கல்லூாரி மாணவர்களுக்கு போக்குவரத்து விதிகள் பற்றிய சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

13) அரசு போக்குவரத்து கழகங்கள் மற்றும் அமைப்பு சாரா ஓட்டுநர்களுக்கு சிறப்பு புத்தாக்க பயிற்சி வழங்குதல்.

14) போக்குவரத்து பயிற்சி பூங்காக்களைப் பார்வையிட வரும் சிறுவர் சிறுமியருக்கு போக்குவரத்து பற்றிய பயிற்சிகள் அளித்தல்

15) பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஒட்டுபவர்களுக்கு நடைமுறை போக்குவரத்து கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**